28th February 1964]

முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தை எரிப்பதற்கு முற்பட்டால் கடுமையாக சில போலீஸார் நடவடிக்கை எடுத்துக் கொண்டாலும்கூட, நான் அதற்கு வருத்தப்பட மாட்டேன்.

Pension to the widows of Government employees

* 113 *Q.*—Sri P. K. MOOKIAH THEVAR: Sri S. MADHAVAN: Sri V. KRISHNAMOORTHY: Sri K. CHEEMAICHAMY: Sri K. A. MATHIALAGAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of the new scheme of pensions offered to the widows of the Central Government employees by the Union Government; and

(b) whether the State Government propose to have similar schemes in this State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) The matter is under consideration.

Retirement age of Government employees

* 114 *Q.*—Sri C. SRINIVASAN, Sri C. CHIRANJEEVULU NAIDU, Sri A. RAGHAVA REDDY, Sri G. RAJARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have issued any orders or have any proposal for fixing the age of retirement at 58 years and even up to 60 in deserving cases for technical and scientific personnel in Government service in view of acute shortage of such personnel; and

(*b*) if so, whether a copy of the orders will be laid on the Table of the House?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) No.

(*b*) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இப்பொழுது நமது நாட்டிலே சராசரி வயது உயர்ந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்கள் திட்டத்தின் சாதனையைப் பற்றி சொல்லுகிற பொழுது. ஆகவே, 55 வயதில் ரிடையர் ஆக வைத்து அவர்களுடைய அனுபவத்தை வீணாக்காமல், ரிடையர் ஆகும் வயதை 58-ஆக உயர்த்தி, அவர்களுடைய அனுபவத்தை நாட்டிற்குப் பயன்படுத்திக்கொள்ள அரசாங்கம் முற்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதற்கு முன்பு இந்த விஷயம் பரிசீலனை செய்யப்பட்டது. அப்பொழுது இந்த சர்க்கார் உத்தியோகஸ்தர்களிடையே மாறுபட்ட கருத்து இருந்தது. ஒரு பகுதி

சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் 'நான்-கெஜடட் ஆபீஸர்ஸ் அஸோஸியேஷன்' இது கூடாது என்று சொன்னார்கள். கீழே இருப்பவர்களின் பிரமோஷன் பாதிக்கப்படும், இது வேண்டாம் என்று அவர்கள் கூறினார்கள். இதையெல்லாம் வைத்துக்கொண்டு அரசாங்கம் ஒரு முடிவு செய்திருக்கிறது. ரிடையராகும் வயதை 55-லிருந்து உயர்த்துவதாக இல்லை. ஆனால், டெக்னிகல் போஸ்டில் உள்ளவர்கள், அவர்கள் தகுதியுள்ளவர்கள் என்று கருதப்பட்டால், அவர்கள் ரிடையராகும் வயதை உயர்த்தலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

9·00 a.m. **திரு. மீ. கலியாணசுந்தரம்** : Non-Gazetted Officer's Association இதை ஆட்சேபிப்பதன் காரணத்தை கனம் முதல் அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள். பதவி உயர்வு அவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புக் குறைந்து விடும். புதிதாக வேலை வாய்ப்புக் குறைந்து விடும் என்ற இரண்டு காரணங்களுக்காக ஆட்சேபணை தெரிவித்திருப்பார்கள். திட்ட அமைப்பின் காரணமாக வேலை வாய்ப்பு அதிகரித்திருப்பது உண்மையானால், இதை அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு இந்தப் பிரச்னையை அரசாங்கம் பரிசீலனை செய்தபொழுது, எல்லா அம்சங்களையும் பரிசீலனை செய்துதான் முடிவுக்கு வந்துள்ளது. இப்பொழுது மீண்டும் மாற்றும் உத்தேசமில்லை. மாற்றும் யோசனையைப் பின்னர் எடுத்துக்கொண்டால், கனம் அங்கத்தினர் சொன்ன விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு, முடிவு செய்யலாம்.

சுங்க வரி வசூல் (கொள்ளிடம் பாலம்)

* **115 கேள்வி.**—திரு. ஆ. கு. சுப்பையா :
திரு. எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி : } கனம்
பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கொள்ளிடம் பாலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு சுங்க வரி வசூலிக்கப்படுகிறது ?

(இ) எந்தெந்த வாகனங்களுக்கு எவ்வளவு வரி வசூலிக்கப்படுகிறது ?

THE HON. SRI V. RAMAIAH : (a) An average amount of Rs. 80,941.65 per annum is realised towards tolls in respect of Coleroon bridge.

(b) A statement[a] showing the rates of tolls levied for each vehicle is placed on the table of the House.

[a] Printed as Appendix on pages 104–106